# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (07.03.2015 முதல் 11.03.2015)

*அறிக்கை எண் 18/2015* *தேதி: 06.03.2015*

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 29°செ முதல் 36°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 27°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 18°செ முதல் 21°செஆகவும், இரவுநேர வெப்பநிலை 07°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மழை காணப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (07.03.2015 முதல் 11.03.2015)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 34°செ முதல் 35°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 74 முதல் 78 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 43 முதல் 48 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 12 கி.மீ முதல் 14 கி.மீ அளவுக்கு கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 07.03.15 | 2 | 35 | 23 | 6 | 75 | 43 | 13 | கிழக்கு |
| 08.03.15 | 2 | 34 | 23 | 6 | 78 | 48 | 14 | கிழக்கு |
| 09.03.15 | 0 | 35 | 23 | 5 | 76 | 45 | 13 | கிழக்கு |
| 10.03.15 | 0 | 35 | 23 | 5 | 75 | 44 | 12 | கிழக்கு |
| 11.03.15 | 0 | 35 | 23 | 4 | 74 | 43 | 14 | கிழக்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ கோடையில் பெய்யும் மழையுடன் சுழல் காற்று வரலாம் என எதிர்பார்க்கப்படுவதால் குலை தள்ளிய வாழைகளுக்கு முட்டு கொடுப்பது அவசியமாகும்.
- ✓ கோடையில் காணப்படும் மழையை பயன்படுத்தி கோடை உழவு செய்வதன் மூலம் களைகளை கட்டுப்படுத்துவதுடன் பூச்சி, நோய் தாக்குதலையும் கட்டுப்படுத்தலாம்.
- ✓ மழை எதிர்பார்க்கப்படுவதால் எள்ளிற்கு வடிகால் வசதி ஏற்படுத்துவதன் மூலம் தேவையான எண்ணிக்கையில் செடிகளை பராமரிக்கலாம்.
- ✓ கோடையில் பெய்யும் மழையுடன் இடி, மின்னலும் வரலாம் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் தங்களது கால்நடைகள் மற்றும் பறவைகளை பாதுகாத்துக் கொள்ளவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ கோடையில் பெய்யும் மழையுடன் சுழல் காற்று வரலாம் என எதிர்பார்க்கப்படுவதால் குலை தள்ளிய வாழைகளுக்கு முட்டு கொடுப்பது அவசியமாகும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**